# பகுதி III

# பகுதி III

## 1997 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்** **பக்கம்**


1. ஒதுக்குத் தேவைப்பாடுகள்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடி/ 01 / 97 I

2. ஒதுக்குத் தேவைப்பாடுகள்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடி/ 02 / 97 IV

3. யப்பான் / இலங்கை சிறப்புக் கொடை யென் 60,734,000/-
( 23 ஆவது படுகடன் நிவாரணக் கொடை)
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடி/ 03 / 97 V

4. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு 2928 சிஈ - நலப்பணிகள் செற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் : பீடி/ 05 / 97 VII

5. ஐ.அ.டொலர் 15 மில்லியன் இந்திய இலங்கை கொடுகடன் ஒப்பந்தம்
இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு செயல்முறை. X


**சுற்றறிக்கை**


6. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின்
கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் - 1997 XI

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் பீடி/ 01/ 97

வங்கித் தொழில்
திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.எண் 590
கொழும்பு 1
1997 சனவரி 16

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 10(இ)93, 94, 96 மற்றும் 97 (இலங்கை சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) ஆகியவற்றின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்டதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1997 சனவரி 13 ஆம் நாளின் எண் 958/1 கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவித்தல் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

2. முன்னைய பந்தியில் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளின்படி 1994 பெப்ருவரி 11 இன் எண் பீடி/ 3/ 94 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பந்தி 1 (11) நீக்கப்பட்டு பின்வருவன பதிலீடு செய்யப்பட்டுள்ளன.

" நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 93 இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி வைப்புப் பொறுப்புக்களின் வகைகளுக்கெதிராக ஒதுக்குகள் வைத்திருக்கப்பட வேண்டியதுடன் அவை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன:

(அ) இலங்கை நாணயத்தில் வகைப்படுத்தப்படும் வைப்புப்பொறுப்புக்கள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்டவை தவிர வெளிநாட்டு நாணய வைப்புக்கள் வாயிலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள். இவை வெளிநாட்டு நாணய தொழிற்படும் நிலுவைகளையும் உள்ளடக்கியுள்ளன."

இரண்டாம் பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

" கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒழுங்குவிதி (ஈ) யின் நியதிகளில் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக ஒதுக்குகளைப் பேண வேண்டுமென வர்த்தக வங்கிகள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.:

(அ) மேலேயுள்ள 1 (11) இன் (அ)வில் குறிப்பிட்டுக் கூறப்பட்ட வைப்புப் பொறுப்புக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய வைப்புப் பொறுப்புக்கள் மொத்தத்தில் 14 சதவீதத்திற்குச் சமமான தொகையாக இருப்பதுடன்,

(ஆ) மேலே கூறப்பட்ட (11) 1 இன் (ஆ)வில் குறிப்பிட்டுக் கூறப்பட்ட வைப்புப் பொறுப்புக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தினது 15 சதவீதத்திற்குச் சமமான தொகையாகவும் இருத்தல் வேண்டும்.

3. தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் பீடி/3/94 உடன் இணைக்கப்பட்டிருந்த அட்டவணை நீக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புதிய அட்டவணை 'பீ' பதிலீடு செய்யப்பட்டது.

4. மேலே கூறப்பட்ட இத் திருத்தங்கள் 1997 சனவரி 17 இலிருந்து நடைமுறைக்கு வரும். 1994 சனவரி 11ஆம் நாளுக்கான எண் பீடி/3/94 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் உள்ளடக்கப்பட்ட ஏனைய எல்லா அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

எம். பீ . திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

வைப்புப் பொறுப்புக்களின் வாராந்த அறிக்கை
(வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள்)

199.................... புதன் கிழமையன்று [1] அலுவல் முடிவடையும் நேரத்தில் .................................... இருந்து.
(வங்கியின் பெயர்)

முதன்மைக் கணக்காளர்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
கீழே கொடுக்கப்பட்டுள்ள வைப்புப் பொறுப்புக்களின் தொகைகள், மேலே குறிப்பிடப்பட்ட நாளுக்கான அலுவல்கள் முடிவடையும்போது வங்கிப் புத்தகங்களில் காட்டப்பட்ட வைப்பு நிலுவைகளின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

| 1 | 11 |
|---|---|
| இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப் பட்டவை தவிர்ந்த எல்லா வைப்புப் பொறுப்புக்களும் (தொழிற்படும் நிலுவைகள் உட்பட) [2] | ஐ.அ. டொலருக்குச் சமமான தொகை |
| மொத்தம் ஐ.அ.டொலர்களில் | |

தேவைப்பட்ட ஒதுக்குகள்

........................................................ வெள்ளிக்கிழமையிலிருந்து தொடங்கும் வாரத்துக்கு

தொழிற்படும் நிலுவைகள் உட்பட இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்டவை தவிர்ந்த வைப்புப் பொறுப்புக்கள் சார்பில் வைத்திருக்கப் படுவதற்கு தேவைப்பட்ட ஒதுக்குகள் — ஐ.அ.டொலர்கள்

ஐ.அ.டொலரின் சதவீதம் ........................................................... ....................................................

மேலேயுள்ள கூற்று சரியாகவும் இவ் வங்கிப் புத்தகங்களுக்கிசைவானதாகவும் உள்ளதெனவும் மேலே காட்டப்பட்ட எண்தொகைகள் இந் நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் எடுத்துக் கூறப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க அமைந்துள்ளதெனவும் நாங்கள்/நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................... ..............................................................

திகதி அலுவல்சார் கையொப்பம்

[1] புதன்கிழமை வங்கி விடுமுறையொன்றாக இருப்பின் அதனை நீக்கிவிட்டு அதற்கு முதல் வேலை நாளாகவுள்ள நாளைக் குறிப்பிடவும்.

[2] வைப்புப் பொறுப்புக்கள் வைக்கப்பட்டுள்ள அந்தந்த நாணயங்களைக் குறிப்பிடவும்.

குறிப்பு : (அ) நடைமுறைக் கணக்குகளுக்கான வைப்புப் பொறுப்புக்கள் என்பவை அத்தகைய கணக்குகள் மீதான வரவு நிலுவைகளின் மொத்தமாகக் காணப்படுவதுடன் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களைப் பொறுத்த வரையில் அத்தகைய கணக்குகளிலான பற்று நிலுவைகள் கழிக்கப்படாமலுமிருக்கும்.

(ஆ) நிரல் 11 இலுள்ள எல்லா விடயங்களும் அண்மிய ஐ.அ. டொலர்களில் காட்டப்படவேண்டும்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் பீடி/ 02/ 97


வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. எண் 590,
கொழும்பு 1

1997 மாச்சு 26

எல்லா வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10 (சீ) 93, 94, 96 மற்றும் 97 ஆகியவற்றின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்டதும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1997 மாச்சு 25ஆம் நாளின் எண் 968/ 3 கொண்ட அதி விசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவித்தல் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

2. மேலே கூறப்பட்ட அறிவித்தலின் 'ஈ' ஒழுங்கு விதியின் நியதிகளின்படி வர்த்தக வங்கிகள் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக ஒதுக்குகளைப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

(அ) இலங்கை நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட வைப்புப் பொறுப்புக்களைப் பொறுத்தவரையில், அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் 12 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றாக இருப்பதுடன்;

(ஆ) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்டவை தவிர வெளிநாட்டு நாணயத்திலான வைப்புக்கள் வாயிலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பணத்திலிருந்து பெறப்பட்டதும் வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்டதும் அத்துடன் எவ்வாறாயினும் வெளிநாட்டு நாணயத்திலான தொழிற்படும் நிலுவைகளை உள்ளடக்கியுள்ளதுமான வைப்புப் பொறுப்புக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தினது 12 சதவீதத்திற்குச் சமமான தொகையாயிருத்தல் வேண்டும்.

3. மேற் கூறப்பட்ட திருத்தங்கள் 1997 மாச்சு 28இலிருந்து நடைமுறைக்குவரும். 1994 பெப்புருவரி 11 ஆம் நாளின் எண் பீடி/ 3/ 94 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் உள்ளடங்கிய ஏனைய எல்லா அறிவுறுத்தல்களும் 1997 சனவரி 16 இன் எண் பீடி/ 1/ 97 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலினால் திருத்தப்பட்டவாறு தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

எம். பி. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடி/ 03/ 97

வெளிநாட்டு நிதிப் பிரிவு
வங்கித் தொழில் திணைக்களம்
தொலைபேசி 346287
1997 யூலை 4

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

**யப்பான்/ இலங்கை சிறப்புக் கொடை யென் 60,734,000/-**
**(23ஆவது படுகடன் நிவராணக் கொடை)**

1. தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளிலிருந்தான இறக்குமதிகளை நிதியிடுவதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கு யப்பானிய அரசினால் வழங்கப்பட்ட கொடைகளின் கீழான இறக்குமதி விடயங்களுடன் தொடர்புபட்ட இவ்வறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வர்த்தக வங்கிகள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இக்கொடைகளின் கீழ் இறக்குமதிகளுக்கான ஒதுக்குகள் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.

2. ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளவர் வழங்குநருடனான தனது ஒப்பந்தத்தின் பிரதியொன்றுடனும் இந் நோக்கத்திற்காக வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கடிதமொன்றுடனும் விண்ணப்பத்தினை மேற்கொள்ளும்போது வர்த்தக வங்கியொன்று வழங்குநரின் நாட்டிலுள்ள தனது பேராளரினூடாக வழங்குநரின் சார்பில் கைமீட்புச் செய்ய இயலாத நாணயக் கடிதமொன்றினை நிறுவலாம். அத்தகைய நாணயக் கடிதம் ஒவ்வொன்றும் நிறுவும் வங்கியின் அடையாள இலக்கத்தினை உடனடுத்து "1 வது யென் கொடை 1997" எனக் குறிப்பிட்ட முன் தொடர் இலக்கமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது வரையறுக்கப்பட்ட டோக்கியோ - மிற்சுபிசி வங்கி, உலகளாவிய வங்கிப் பணிப்பிரிவு, டோக்கியோ , யப்பான் என்ற முகவரியிலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சாதாரண யென் வைப்புக் கணக்கு எண் 5220023647 இல் பற்று வைப்பதன் மூலம் செலவீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை ஒவ்வொரு நாணயக் கடிதமும் குறித்துரைத்தல் வேண்டும். செலவீட்டிற்கான கோரிக்கையானது ஆவணங்கள் நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இசைவாக உள்ளன எனவும் ஆவணங்கள் கடன் திறக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். <u>அத்தகைய கடன் நிறுவப்பட்டதன் பின்னர் கடன் வழங்கும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்தினதும் இரண்டு பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பின்னர், அவர் கடன் தொடர்பான செலவீட்டு அனுமதியினை வரையறுக்கப்பட்ட டோக்கியோ மிற்சுபிசி வங்கி, டோக்கியோ யப்பான் என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பார். இந்த அனுமதியின்றி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு செலவீடு மேற்கொள்ளப்படமாட்டாது.</u>

4. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவுடன் ஆவணங்களின் பெறுமதிக்குச் சமமான இலங்கை ரூபாவிற்குச் சமமான தொகையினைச் சேகரித்துக் கொண்டதன் பின்னர் மட்டுமே கடன் திறக்கும் வங்கி அவற்றினை இறக்குமதியாள

ருக்கு விடுவித்தல் வேண்டும். இறக்குமதியாளருக்கு அத்தகைய ஆவணங்களை விடுவிப்பதற்கு முன்னர், ஆவணங்களின் முழுப்பெறுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட 10 நாட்களுக்குள் இறக்குமதியாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியான 10 நாட்களுக்குள் ஆவணங்களின் பெறுமதியினை இறக்குமதியாளர்கள் செலுத்தத் தவறினால் வங்கியிலிருந்து ஆவணங்கள் பெறப்பட்டதற்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து இறக்குமதியாளரினால் உண்டியல் கழிவு செய்யப்படும் நாள்வரை வங்கி வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டொன்றிற்கு 3% வட்டி செலுத்த வேண்டியேற்படும்.

6. வர்த்தக வங்கிகள், இறக்குமதியாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தும்போது, இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலை மேற்கோள்காட்டி பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும்.

(அ) இறக்குமதியாளரின் பெயரும் முகவரியும்

(ஆ) நாணயக் கடிதத்தின் இலக்கம்

(இ) ஏற்றுமதியாளரின் பெயர்

(ஈ) யென்னுக்குச் சமமான தொகை (ஆவணங்கள் வேறு ஏதேனும் மாற்றத்தக்க நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் குறித்துக்காட்டப்படுதல் வேண்டும்)

(உ) பிரயோகிக்கப்படும் செலாவணிவீதம் (யப்பானிய யென் வீதமும் எதிர்மாறாக நாணயக்கடிதம் திறக்கப்பட்ட நாணயத்திற்கான வீதமும் உட்பட)

(ஊ) ஆவணங்கள் பெறப்பட்ட திகதி

(எ) இறக்குமதியாளருக்கான அறிவுறுத்தல் திகதி

(ஏ) இறக்குமதியாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி

7. கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் கப்பலேற்றல் தொடர்பாக பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு பிரதியினையும் இணைப்பதற்கு வர்த்தக வங்கிகள் உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

(i) பொருட்களின் விலைப்பட்டியல்

(ii) ஏற்றுமுறி/ வான் வழிக் கட்டணம்

(iii) வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கொடுப்பனவுத் தொகை என்பனவற்றிற்கான சான்று ஆவணங்கள்.

எம். பீ. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள் : (1) வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
செயலகம்
கொழும்பு 1

(2) செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

வங்கித் தொழில் திணைக்களம்
வெளிநாட்டு நிதிப் பிரிவு
1997 திசெம்பர் 29

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பீடி/ 05/ 97

முகாமையாளர்
இலங்கை வங்கி
மாநகர இறக்குமதித் திணைக்களம்
கொழும்பு 1

அன்புள்ள ஐயா,

**பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு 2928 சிஈ – நலப்பணிகள் செயற்றிட்டம்**

உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட தலைப்பிலான கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறைகள் பின்பற்றப்படலாம்.

1. செயற்றிட்ட இணைப்பாளர், ப.அ. அமைப்பு/ உலக வங்கி நலப்பணிகள் செயற்றிட்டம் , சுகாதார சுதேச மருத்துவ அமைச்சு, 231 த சேரம் பிளேஸ் கொழும்பு 10 இன் சார்பில் நிறுவப்பட்ட துணைநாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களுக்கெதிராகவே இறக்குமதிகள் மேற்கொள்ளப்படும்.

2. நாணயக் கடிதத்தினைத் திறப்பதற்கான உங்களது அதிகாரம் ஐடீஏ 2928 சி.ஈ. –நலப்பணிகள் செயற்றிட்டம் என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கடிதமாக இருக்கும்.

3. என்னால் வேறுவகையாக அறிவுறுத்தப்பட்டாலன்றி, உங்களது வங்கியினால் திறக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்கான செலவீடு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் மேற்கொள்ளப்படும் என்பதனையும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியின் சார்பாக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் சிறப்புக் கடப்பாடு வழங்கப்படுமிடத்து மட்டுமே நாணயக்கடிதம் செயற்படும் என்பதனையும் குறிப்பிடுதல் வேண்டும்.

4. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் சிறப்புக் கடப்பாட்டிற்கான விண்ணப்பங்கள் உங்களது வாடிக்கையாளரினால் படிவம் 1931இல் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) மேற் கொள்ளப்படவேண்டியதோடு அதனோடு பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   (அ) செலுத்தப்படவுள்ள கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதியொன்று.

(ஆ) உங்களது வங்கியினால் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள்

5. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிற்கான ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளைச் சமர்ப்பிக்குமாறு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கி அறிவுறுத்தப்பட வேண்டியதோடு அவை பின்வருவனவற்றின் திருத்தங்களுக்கான எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கக் கூடியதாக இருக்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி

(ஆ) விளக்கவுரை அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர், அத்துடன்

(ஈ) மூலத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேலாக அல்லது பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப் பட்ட தேதிக்கு அப்பால் நாணயக் கடிதம் காலாவதியாகும் தேதியில் ஏதேனும் நீடிப்பு ஏனைய திருத்தங்களுக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது.

6. தலைப்பிடப்பட்ட கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையினால் குறித்துரைக்கப்பட்டமையினால் ஏனைய நாணயமொன்றினால் குறிப்பிடப்பட்டுள்ள நாணயக் கடிதங்கள் தொடர்பாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கான அதனது சிறப்புக் கடப்பாட்டுக் கடிதத்தில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு சிறப்பு எடுப்பனவு உரிமக் கடப்பாட்டினைக் குறித்துரைக்கும். அதனது கடப்பாட்டின் இந்த வரையறைகளின் காரணமாக நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு வெளிநாட்டிலுள்ள உங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் மொத்தத் தொகையினை செலவீடு செய்யாவிடில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பாக உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய மிகுதியை நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

7. இக் கொடுகடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பலேற்று ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினைச் செலுத்த வேண்டிய தில்லை. எனவே அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்டவுடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள், கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதங்களின் பிரதிகள் கொழும்பு, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் உங்களுக்குத் தனியாக அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள
ஏ. சண்முகசாமி
மேலதிக முதன்மைக் கணக்காளர்

பிரதிகள் 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
2. செயற்றிட்ட இணைப்பாளர்
ப.அ.அமைப்பு/ உலக வங்கி சுகாதாரப்
பணிகள் செயற்றிட்டம்
சுகாதார சுதேச மருத்துவ அமைச்சு
231, த சேரம் பிளேஸ்
கொழும்பு. 10

பீடீ/ எப்எப்/ ஐஎன்டி/ 661

வங்கித் தொழில் திணைக்களம்
1997 சனவரி 22

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

**ஐ.அ.டொலர் 15 மில்லியன் இந்திய இலங்கை கொடுகடன் ஒப்பந்தம்**
**இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு செயல்முறை**

1996 ஒத்தோபர் 14 ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் பீடி/07/96 தொடர்பாக

இந்தியத் தொடர்க் கொடுகடன்களின் கீழ் உடன்படிக்கைகளுக்கு கையெழுத்திடல் மற்றும் நாணயக் கடிதங்களை நிறுவுதல் என்பனவற்றின் முடிவுத் திகதியை 1998.01.31 ஆம் நாள் வரைக்கும் பகிர்ந்தளிப்புக்கான முடிவுத் திகதியை 1999.01.31 ஆம் நாள் வரைக்கும் இந்திய அரசாங்கம் நீடித்துள்ளது என்பதனை உங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

1996 ஒத்தோபர் 14ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் பீடி/ 07/ 96இன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றமெதுவுமில்லை.

எம். பீ. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள்: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
2. பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

# வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் – 1997

(இலங்கை ரூபாய்களில்)

| நடைமுறையான நாள் | சுற்றறிக்கை எண் | அவுஸ்திரே. டொலர் (டொலர் 1 இற்கு) | ஒசுத்திரிய சிலிங் (சிலிங் 10 இற்கு) | பாரெயின் தினார் (தினார் 1 இற்கு) | பெல்சியம் பிராங்கு (பிராங் 10 இற்கு) | கனடிய டொலர் (டொலர் 1 இற்கு) | தெனிச குறோனர் (குறோனர் 10 இற்கு) | டியுச் மார்க் (டியுச் மார்க் 1 இற்கு) | பின்லாந்து மார்க்கா (மார்க்கா 10 இற்கு) | பிரெஞ்சு பிராங்கு (பிராங்கு 10 இற்கு) | கொங்கொங் டொலர் (டொலர் 10 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.97 | 4259 | 43.65 | 49.95 | 145.30 | 17.10 | 40.05 | 92.05 | 35.20 | 114.85 | 104.45 | 70.80 |
| 07.01.97 | 4261 | 43.30 | 50.35 | 145.45 | 16.95 | 40.00 | 91.40 | 34.90 | 115.10 | 103.30 | 70.90 |
| 15.01.97 | 4263 | 42.85 | 49.45 | 145.60 | 16.80 | 40.75 | 90.90 | 34.60 | 113.55 | 102.60 | 70.95 |
| 21.01.97 | 4265 | 42.90 | 48.75 | 145.85 | 16.50 | 41.00 | 89.20 | 34.05 | 112.10 | 100.90 | 71.05 |
| 28.01.97 | 4267 | 42.65 | 48.10 | 146.35 | 16.35 | 40.95 | 88.35 | 33.70 | 109.95 | 99.95 | 71.25 |
| 05.02.97 | 4269 | 42.20 | 48.10 | 146.65 | 16.35 | 41.05 | 88.20 | 33.65 | 110.35 | 99.65 | 71.35 |
| 11.02.97 | 4271 | 42.10 | 47.30 | 146.85 | 16.25 | 40.95 | 88.30 | 33.60 | 109.40 | 99.60 | 71.45 |
| 18.02.97 | 4273 | 42.40 | 46.85 | 147.25 | 15.85 | 41.10 | 85.95 | 32.75 | 108.10 | 97.10 | 71.60 |
| 25.02.97 | 4275 | 43.15 | 46.75 | 147.25 | 16.05 | 40.70 | 86.50 | 33.10 | 107.30 | 97.95 | 71.65 |
| 04.03.97 | 4277 | 43.35 | 46.70 | 147.45 | 15.90 | 40.60 | 86.10 | 32.85 | 107.30 | 97.20 | 71.75 |
| 11.03.97 | 4279 | 43.90 | 46.20 | 147.80 | 15.80 | 40.70 | 85.35 | 32.55 | 106.05 | 96.50 | 71.95 |
| 18.03.97 | 4281 | 44.55 | 46.50 | 148.05 | 15.95 | 40.90 | 86.20 | 32.90 | 106.70 | 97.55 | 72.05 |
| 25.03.97 | 4283 | 44.00 | 47.05 | 148.40 | 16.05 | 40.60 | 87.05 | 33.15 | 107.75 | 98.35 | 72.20 |
| 01.04.97 | 4285 | 43.95 | 47.15 | 148.70 | 16.15 | 40.60 | 87.55 | 33.35 | 109.20 | 99.05 | 72.35 |
| 08.04.97 | 4287 | 43.65 | 47.90 | 149.15 | 16.15 | 40.35 | 87.25 | 33.25 | 109.00 | 98.75 | 72.55 |
| 16.04.97 | 4289 | 44.30 | 46.75 | 149.75 | 15.90 | 40.50 | 86.15 | 32.80 | 107.15 | 97.50 | 72.85 |
| 28.04.97 | 4291 | 43.85 | 46.75 | 149.85 | 16.05 | 40.40 | 86.70 | 33.15 | 105.75 | 98.20 | 72.90 |
| 29.04.97 | 4293 | 43.85 | 46.95 | 150.40 | 15.85 | 40.55 | 85.75 | 32.65 | 106.95 | 96.80 | 73.20 |
| 06.05.97 | 4295 | 44.50 | 46.75 | 150.65 | 15.90 | 41.20 | 86.30 | 32.85 | 106.45 | 97.30 | 73.30 |
| 13.05.97 | 4297 | 44.10 | 47.80 | 150.70 | 16.35 | 40.80 | 88.90 | 33.80 | 107.40 | 100.20 | 73.35 |
| 20.05.97 | 4299 | 43.95 | 47.70 | 150.60 | 16.25 | 41.60 | 88.25 | 33.80 | 107.65 | 99.85 | 73.35 |
| 27.05.97 | 4301 | 43.45 | 47.70 | 150.25 | 16.40 | 41.30 | 88.75 | 33.85 | 108.20 | 100.20 | 73.40 |
| 03.06.97 | 4303 | 43.30 | 47.50 | 150.95 | 16.10 | 41.35 | 87.05 | 33.20 | 108.00 | 98.15 | 73.45 |
| 16.06.97 | 4305 | 43.35 | 46.95 | 151.05 | 16.05 | 41.05 | 86.80 | 33.10 | 106.25 | 98.15 | 73.50 |
| 17.06.97 | 4307 | 42.80 | 46.65 | 151.25 | 15.90 | 41.25 | 86.25 | 32.85 | 107.00 | 97.20 | 73.60 |
| 24.06.97 | 4309 | 42.80 | 46.85 | 151.30 | 15.95 | 41.05 | 86.65 | 32.95 | 107.10 | 97.80 | 73.60 |
| 01.07.97 | 4311 | 42.50 | 47.00 | 151.35 | 15.90 | 41.30 | 86.05 | 32.80 | 107.70 | 97.30 | 73.60 |
| 08.07.97 | 4313 | 42.70 | 46.25 | 151.40 | 15.70 | 41.45 | 85.45 | 32.55 | 106.65 | 96.60 | 73.70 |
| 15.07.97 | 4315 | 42.20 | 45.90 | 151.55 | 15.55 | 41.70 | 84.25 | 32.05 | 106.50 | 94.90 | 73.70 |
| 22.07.97 | 4317 | 42.40 | 45.20 | 151.75 | 15.50 | 41.60 | 84.05 | 32.00 | 105.00 | 94.70 | 73.80 |
| 29.07.97 | 4319 | 42.35 | 44.35 | 152.20 | 15.05 | 41.40 | 81.70 | 31.10 | 102.90 | 92.30 | 74.10 |
| 05.08.97 | 4321 | 42.45 | 43.95 | 152.45 | 14.90 | 41.60 | 80.90 | 30.80 | 101.50 | 91.35 | 74.20 |
| 12.08.97 | 4323 | 42.30 | 43.90 | 152.50 | 15.05 | 41.35 | 81.55 | 31.05 | 99.85 | 92.20 | 74.25 |
| 20.08.97 | 4325 | 42.40 | 44.85 | 152.50 | 15.15 | 41.40 | 82.25 | 31.30 | 102.90 | 92.95 | 74.25 |
| 26.08.97 | 4327 | 42.95 | 45.20 | 152.55 | 15.35 | 41.35 | 82.95 | 31.65 | 102.20 | 93.95 | 74.25 |
| 02.09.97 | 4329 | 42.10 | 45.20 | 152.60 | 15.35 | 41.40 | 83.45 | 31.75 | 103.90 | 94.30 | 74.25 |
| 09.09.97 | 4331 | 42.10 | 45.50 | 152.80 | 15.50 | 41.70 | 83.90 | 31.95 | 103.30 | 94.95 | 74.35 |
| 16.09.97 | 4333 | 41.65 | 46.25 | 152.90 | 15.70 | 41.40 | 84.90 | 32.40 | 104.90 | 96.40 | 74.40 |
| 23.09.97 | 4335 | 41.50 | 46.25 | 153.05 | 15.75 | 41.55 | 85.50 | 32.50 | 105.65 | 96.75 | 74.50 |
| 30.09.97 | 4337 | 41.55 | 46.45 | 153.20 | 15.90 | 41.70 | 86.05 | 32.75 | 107.20 | 97.55 | 74.65 |
| 07.10.97 | 4339 | 42.10 | 46.70 | 153.40 | 16.00 | 42.15 | 86.50 | 32.95 | 105.55 | 98.05 | 74.75 |
| 14.10.97 | 4341 | 42.70 | 47.00 | 153.50 | 16.00 | 41.95 | 86.70 | 33.05 | 107.55 | 98.40 | 74.80 |
| 21.10.97 | 4343 | 42.85 | 46.85 | 153.70 | 15.85 | 42.00 | 86.85 | 32.70 | 106.90 | 97.65 | 74.90 |
| 28.10.97 | 4345 | 39.80 | 46.40 | 153.90 | 15.90 | 41.65 | 86.00 | 32.75 | 106.25 | 97.70 | 74.95 |
| 04.11.97 | 4347 | 40.95 | 47.95 | 154.00 | 16.25 | 41.20 | 88.05 | 33.50 | 108.80 | 100.05 | 75.05 |
| 11.11.97 | 4349 | 40.55 | 48.30 | 154.30 | 16.45 | 41.25 | 89.15 | 33.95 | 109.90 | 101.40 | 75.25 |
| 18.11.97 | 4351 | 40.55 | 47.85 | 154.55 | 16.25 | 41.25 | 88.30 | 33.60 | 108.75 | 100.35 | 75.35 |
| 25.11.97 | 4353 | 40.65 | 47.60 | 154.95 | 16.30 | 41.20 | 88.25 | 33.60 | 108.15 | 100.40 | 75.55 |
| 02.12.97 | 4355 | 39.75 | 47.25 | 155.60 | 16.10 | 41.15 | 87.35 | 33.20 | 106.95 | 99.25 | 75.85 |
| 09.12.97 | 4357 | 39.45 | 47.40 | 156.00 | 16.00 | 41.35 | 86.60 | 32.95 | 106.85 | 98.50 | 76.00 |
| 16.12.97 | 4359 | 38.85 | 47.55 | 156.45 | 16.05 | 41.50 | 87.10 | 33.15 | 107.65 | 99.00 | 76.10 |
| 23.12.97 | 4361 | 38.55 | 47.60 | 156.70 | 16.10 | 41.20 | 87.10 | 33.20 | 107.50 | 99.25 | 76.20 |
| 30.12.97 | 4363 | 38.85 | 47.65 | 156.90 | 16.20 | 41.15 | 87.60 | 33.40 | 106.75 | 99.75 | 76.30 |

| நடைமுறையான நாள் | இத்தாலிய லீறா (லீறா 1000 இற்கு) | யப்பானிய யென் (யென் 100 இற்கு) | குவைத் தினார் (தினார் 1 இற்கு) | மலேசியா ரிங்கிற் (ரிங்கிற் 1 இற்கு) | நெதர்லாந்து கில்டர் (கில்டர் 1 இற்கு) | நோர்வே குறோனர் (குறோனர் 10 இற்கு) | ஓமானிய ரியால் (ரியால் 1 இற்கு) | சவூதி அரேபிய ரியால் (ரியால் 1 இற்கு) | சிங்கப்பூர் டொலர் (டொலர் 1 இற்கு) | சுவீடன் குறோனர் (குறோனர் 10 இற்கு) | சுவிட்சர்லா. பிராங்கு (பிராங்கு 1 இற்கு) | ஐக்கிய அராபிய எமிரேற். திறாம்கள் (திறாம் 1 இற்கு) | ஐக். இராச்சிய பவுண் (பவுண் 1 இற்கு) | ஐக். அமெரிக்க டொலர் (டொலர் 1 இற்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.97 | 35.85 | 47.20 | 178.70 | 21.65 | 31.35 | 84.95 | 138.50 | 14.60 | 39.10 | 79.70 | 40.60 | 14.90 | 92.60 | 55.30 |
| 07.01.97 | 35.85 | 47.00 | 177.90 | 21.75 | 31.10 | 84.60 | 138.60 | 14.60 | 39.05 | 78.75 | 40.25 | 14.95 | 92.80 | 55.35 |
| 15.01.97 | 35.60 | 47.30 | 178.20 | 22.20 | 30.85 | 85.65 | 138.75 | 14.65 | 39.10 | 79.30 | 39.85 | 14.95 | 92.25 | 55.40 |
| 21.01.97 | 35.15 | 46.80 | 178.00 | 22.15 | 30.30 | 86.45 | 139.00 | 14.65 | 39.10 | 78.05 | 39.30 | 14.95 | 91.75 | 55.50 |
| 28.01.97 | 34.75 | 46.25 | 178.00 | 22.15 | 30.05 | 84.45 | 139.45 | 14.70 | 39.15 | 76.30 | 39.05 | 15.00 | 89.75 | 55.65 |
| 05.02.97 | 34.35 | 45.50 | 177.75 | 22.25 | 29.95 | 84.95 | 139.75 | 14.75 | 39.25 | 76.00 | 38.75 | 15.05 | 88.50 | 55.80 |
| 11.02.97 | 33.85 | 45.10 | 178.00 | 22.25 | 29.95 | 85.65 | 139.95 | 14.75 | 39.25 | 75.75 | 39.00 | 15.05 | 90.20 | 55.85 |
| 18.02.97 | 33.40 | 44.50 | 178.05 | 22.30 | 29.15 | 82.60 | 140.30 | 14.80 | 39.10 | 75.05 | 37.70 | 15.10 | 90.00 | 56.00 |
| 25.02.97 | 33.30 | 45.25 | 177.85 | 22.40 | 29.45 | 82.60 | 140.30 | 14.80 | 39.00 | 75.05 | 37.95 | 15.10 | 90.10 | 56.00 |
| 04.03.97 | 32.90 | 46.10 | 178.10 | 22.35 | 29.20 | 82.10 | 140.50 | 14.80 | 38.95 | 73.80 | 37.60 | 15.15 | 90.45 | 56.10 |
| 11.03.97 | 32.75 | 45.70 | 178.70 | 22.45 | 28.90 | 80.65 | 140.85 | 14.85 | 38.90 | 72.70 | 37.75 | 15.15 | 89.35 | 56.25 |
| 18.03.97 | 32.95 | 45.10 | 179.00 | 22.55 | 29.25 | 81.45 | 141.05 | 14.90 | 38.90 | 71.90 | 38.30 | 15.20 | 89.40 | 56.30 |
| 25.03.97 | 33.15 | 45.70 | 179.50 | 22.60 | 29.50 | 83.60 | 141.45 | 14.90 | 38.80 | 73.40 | 38.40 | 15.25 | 89.70 | 56.45 |
| 01.04.97 | 33.50 | 45.20 | 179.90 | 22.60 | 29.65 | 84.25 | 141.70 | 14.95 | 38.85 | 74.00 | 38.60 | 15.25 | 91.50 | 56.60 |
| 08.04.97 | 33.90 | 45.05 | 180.45 | 22.60 | 29.55 | 82.35 | 142.15 | 15.00 | 39.10 | 73.55 | 38.80 | 15.30 | 91.80 | 56.75 |
| 16.04.97 | 33.20 | 44.80 | 180.55 | 22.55 | 29.20 | 80.90 | 142.70 | 15.05 | 39.30 | 73.25 | 38.40 | 15.35 | 91.55 | 57.00 |
| 28.04.97 | 33.30 | 44.95 | 180.70 | 22.55 | 29.50 | 80.25 | 142.80 | 15.05 | 39.20 | 73.90 | 38.95 | 15.40 | 92.35 | 57.00 |
| 29.04.97 | 33.25 | 44.75 | 181.85 | 22.60 | 29.00 | 79.90 | 143.35 | 15.10 | 39.25 | 72.45 | 38.40 | 15.45 | 92.00 | 57.25 |
| 06.05.97 | 33.15 | 44.85 | 181.35 | 22.65 | 29.20 | 79.85 | 143.55 | 15.15 | 39.30 | 72.40 | 38.60 | 15.45 | 92.10 | 57.30 |
| 13.05.97 | 33.85 | 48.00 | 181.80 | 22.70 | 30.05 | 81.25 | 143.60 | 15.15 | 39.65 | 74.40 | 40.20 | 15.45 | 91.95 | 57.35 |
| 20.05.97 | 33.95 | 49.10 | 182.65 | 22.75 | 29.85 | 81.00 | 143.55 | 15.15 | 39.60 | 74.80 | 40.10 | 15.45 | 92.95 | 57.30 |
| 27.05.97 | 34.10 | 49.00 | 182.85 | 22.70 | 30.10 | 80.85 | 143.60 | 15.15 | 39.70 | 75.00 | 40.80 | 15.45 | 93.20 | 57.35 |
| 03.06.97 | 33.65 | 48.95 | 183.15 | 22.60 | 29.50 | 79.60 | 143.85 | 15.15 | 39.75 | 73.05 | 40.20 | 15.50 | 93.25 | 57.40 |
| 16.06.97 | 33.40 | 50.30 | 182.75 | 22.65 | 29.45 | 79.60 | 143.90 | 15.20 | 39.90 | 73.15 | 39.45 | 15.50 | 92.95 | 57.45 |
| 17.06.97 | 33.40 | 49.70 | 183.20 | 22.65 | 29.20 | 78.55 | 144.10 | 15.20 | 39.90 | 73.40 | 39.50 | 15.50 | 93.15 | 57.55 |
| 24.06.97 | 33.70 | 49.40 | 183.40 | 22.65 | 29.30 | 78.50 | 144.15 | 15.20 | 39.90 | 73.95 | 39.55 | 15.55 | 94.35 | 57.55 |
| 01.07.97 | 33.60 | 49.90 | 183.75 | 22.60 | 29.15 | 78.00 | 144.20 | 15.20 | 39.90 | 73.75 | 39.25 | 15.55 | 94.95 | 57.55 |
| 08.07.97 | 33.40 | 50.45 | 183.55 | 22.60 | 28.90 | 78.10 | 144.25 | 15.20 | 39.70 | 73.95 | 38.95 | 15.55 | 96.30 | 57.60 |
| 15.07.97 | 33.30 | 50.10 | 183.75 | 22.45 | 28.50 | 76.85 | 144.40 | 15.25 | 39.55 | 73.50 | 38.95 | 15.55 | 96.40 | 57.65 |
| 22.07.97 | 32.80 | 49.50 | 183.70 | 21.65 | 28.45 | 77.50 | 144.60 | 15.25 | 39.00 | 73.65 | 38.85 | 15.60 | 96.10 | 57.75 |
| 29.07.97 | 32.05 | 48.95 | 184.05 | 21.65 | 27.60 | 75.20 | 145.00 | 15.30 | 38.90 | 72.55 | 37.70 | 15.60 | 95.15 | 57.90 |
| 05.08.97 | 31.70 | 48.45 | 183.60 | 22.05 | 27.35 | 74.50 | 145.25 | 15.30 | 39.25 | 71.55 | 37.55 | 15.65 | 93.60 | 58.00 |
| 12.08.97 | 32.05 | 49.80 | 183.30 | 21.40 | 27.55 | 75.70 | 145.30 | 15.35 | 38.95 | 72.35 | 37.95 | 15.65 | 91.15 | 58.00 |
| 20.08.97 | 32.30 | 48.60 | 183.25 | 20.60 | 27.80 | 75.25 | 145.30 | 15.30 | 37.90 | 71.50 | 37.85 | 15.65 | 92.20 | 58.00 |
| 26.08.97 | 32.40 | 48.70 | 183.25 | 20.75 | 28.10 | 75.70 | 145.35 | 15.35 | 38.40 | 72.05 | 38.45 | 15.65 | 92.40 | 58.00 |
| 02.09.97 | 32.65 | 47.70 | 183.80 | 19.65 | 28.20 | 76.80 | 145.40 | 15.35 | 38.00 | 72.95 | 38.55 | 15.65 | 92.75 | 58.05 |
| 09.09.97 | 32.70 | 47.55 | 183.65 | 19.50 | 28.40 | 77.75 | 145.60 | 15.35 | 38.00 | 74.05 | 39.00 | 15.70 | 91.55 | 58.15 |
| 16.09.97 | 33.30 | 47.80 | 183.90 | 19.45 | 28.75 | 78.60 | 145.70 | 15.35 | 38.10 | 74.35 | 39.30 | 15.70 | 92.55 | 58.15 |
| 23.09.97 | 33.35 | 47.15 | 184.40 | 18.80 | 28.90 | 80.15 | 145.85 | 15.40 | 37.80 | 76.10 | 39.50 | 15.70 | 92.80 | 58.20 |
| 30.09.97 | 33.50 | 47.60 | 184.40 | 18.35 | 29.10 | 80.90 | 146.00 | 15.40 | 37.80 | 76.00 | 39.75 | 15.75 | 92.95 | 58.30 |
| 07.10.97 | 33.55 | 47.45 | 185.00 | 17.10 | 29.25 | 82.55 | 146.15 | 15.40 | 37.35 | 77.10 | 39.95 | 15.75 | 93.35 | 58.35 |
| 14.10.97 | 33.60 | 48.15 | 185.10 | 18.35 | 29.35 | 82.45 | 146.25 | 15.40 | 37.45 | 76.20 | 39.65 | 15.75 | 93.90 | 58.40 |
| 21.10.97 | 33.55 | 47.80 | 185.50 | 18.45 | 29.05 | 82.65 | 146.50 | 15.45 | 37.10 | 76.30 | 39.35 | 15.80 | 94.70 | 58.50 |
| 28.10.97 | 33.40 | 47.50 | 185.60 | 17.10 | 29.10 | 81.45 | 146.65 | 15.45 | 36.45 | 76.40 | 39.65 | 15.80 | 94.85 | 58.55 |
| 04.11.97 | 34.35 | 48.20 | 185.75 | 17.70 | 29.75 | 82.60 | 146.75 | 15.45 | 37.15 | 77.00 | 41.25 | 15.80 | 97.25 | 58.60 |
| 11.11.97 | 34.75 | 46.95 | 186.10 | 17.50 | 30.10 | 83.45 | 147.05 | 15.50 | 36.95 | 78.10 | 41.65 | 15.85 | 98.00 | 58.70 |
| 18.11.97 | 34.45 | 46.60 | 187.10 | 17.55 | 29.80 | 82.35 | 147.25 | 15.55 | 36.90 | 77.30 | 41.45 | 15.85 | 98.25 | 58.80 |
| 25.11.97 | 34.05 | 46.10 | 187.30 | 16.90 | 29.80 | 82.55 | 147.65 | 15.55 | 36.70 | 77.20 | 41.45 | 15.90 | 98.70 | 58.95 |
| 02.12.97 | 33.95 | 45.85 | 187.80 | 16.65 | 29.50 | 81.55 | 148.25 | 15.65 | 36.70 | 75.70 | 41.10 | 15.95 | 98.75 | 59.20 |
| 09.12.97 | 33.70 | 45.30 | 188.00 | 15.50 | 29.30 | 81.35 | 148.65 | 15.75 | 36.30 | 75.25 | 40.70 | 16.00 | 97.40 | 59.35 |
| 16.12.97 | 33.95 | 44.95 | 188.10 | 15.55 | 29.40 | 80.90 | 149.10 | 15.70 | 35.70 | 75.70 | 41.00 | 16.05 | 97.15 | 59.50 |
| 23.12.97 | 34.05 | 45.65 | 188.35 | 15.45 | 29.45 | 81.00 | 149.30 | 15.75 | 35.25 | 75.85 | 41.10 | 16.10 | 98.60 | 59.60 |
| 30.12.97 | 33.95 | 45.40 | 188.60 | 15.30 | 29.60 | 81.15 | 149.45 | 15.75 | 35.35 | 76.25 | 41.30 | 16.10 | 99.20 | 59.70 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி